2004 ஜூலை 31]

முன்னுரிமை கொடுத்து எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. லா. சந்தானம்.*

திரு. லா. சந்தானம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 103, திரு. கா. கந்தசாமி, மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.*

103—

உலக வர்த்தக நிறுவன ஒப்பந்தம்

***32132—திரு. கா. கந்தசாமி:**

மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உலக வர்த்தக நிறுவன ஒப்பந்தத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து அரசு ஆய்வு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை (நிலை) எண் 121, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, நாள் 19-11-2001-ல் உலக வர்த்தக மைய இணைப்புப் பிரிவு—WTO Nodal Cell—ஒன்று, தமிழக அரசால் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இப்பிரிவு, பல்வேறு துறைகளையும், பங்கு வர்த்தகதாரர்களையும் ஒருங்கிணைத்து, ஒரு பாலமாகச் செயல்பட்டு வருகிறது. இதற்கென இந்தியப் பொருளியல் பணி பதவித் தரத்தில், ஒரு தனி அலுவலர் செயல்பட்டு வருகிறார். இவர் திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறைச் செயலாளரின் நேரடிப் பார்வைக்குட்பட்டும், வளர்ச்சி ஆணையாளரின் முழுக் கட்டுப்பாட்டின்கீழும் செயல்படுகிறார். உலக வர்த்தக மைய இணைப்புப் பிரிவு—WTO Nodal Cell—மைய அரசின் கருத்தினைச் சம்பந்தப்பட்ட அரசுத் துறைக்குத் தெரிவித்து, அறிக்கைகளைக் கோரிப் பெற்று, உரிய காலங்களில் அதனைக் கொண்டு செல்வதுடன், நமது மாநில அனைத்துத் துறைகளின் ஒட்டுமொத்த அறிக்கையினை நடுவண் அரசின் சம்பந்தப்பட்ட அமைச்சகங்களுக்கு உடனுக்குடன் அனுப்புகிறது.*

[2004 ஜூலை 31

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செ. வெங்கடாஜலம்.

திரு. செ. வெங்கடாஜலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாய்லாந்து நாட்டிலிருந்து ஸ்டார்ச் இறக்குமதி செய்யப்படுவதாக அறிகிறோம். வேளாண்மை உற்பத்திப் பொருளுக்கு, உலக வர்த்தக நிறுவன ஒப்பந்தத்தால், விலை வீழ்ச்சி ஏற்படும் என்ற அச்சம் உள்ளதை அரசு அறியுமா? இதனால், அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படும் வாய்ப்பு உள்ளது; இதைச் சரிக்கட்ட அரசின் செயல்பாடுகள் என்ன என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, WTO—World Trade Organisation—ஒப்பந்தத்தின் அடிப்படையில், Globalisation—உலகமயமாக்குதல்—என்ற நடவடிக்கையை மைய அரசு ஒப்புக்கொண்டது. கிராமப்புற விவசாயப் பொருளாதாரம் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி உள்ளது என்பதனை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய அரசு உணர்ந்து, இதை மைய அரசினுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போல, அந்த மாவுப் பொருளைப் பொறுத்தவரைக்கும், Tapioca Starch and Maize Starch—ஆக, இரு வகை starch உற்பத்தி—நமது நாட்டிலே பெருமளவு செய்யப்படுகிறது. குச்சிக் கிழங்கு மற்றும் மக்காச்சோளம் போன்ற பயிர்களிலிருந்து தயாராகும் இந்த starch-ஐ, வெளிநாடுகளிலிருந்து, குறிப்பாக, தாய்லாந்து நாட்டிலிருந்து, மைய அரசு பெருமளவு இறக்குமதி செய்வதற்கு WTO என்ற போர்வையின்கீழ் அனுமதி தந்திருக்கிறது. அதனால், நமது நாட்டிலுள்ள, தமிழகம் மட்டுமல்ல, அகில இந்திய அளவிலே இருக்கின்ற மக்காச்சோளம் மற்றும் குச்சிக் கிழங்கு போன்ற starch-க்குத் தேவையான விவசாயப் பொருள் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டு, விலை வீழ்ச்சி ஏற்பட்டு, ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. WTO-விலே, import duty-யை அதிகப்படுத்த வேண்டுமென்று மைய அரசை மாநில அரசு வற்புறுத்தி வருகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த starch-க்கு, இன்னும் பல பொருட்களுக்கு import duty-யை மைய அரசு அதிகப்படுத்துகிறபோதுதான், WTO என்ற இந்த உலக வர்த்தக நிறுவனத்தின் ஒப்பந்தத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்பிலிருந்து விவசாயப் பொருளாதாரத்தைப் பாதுகாக்க முடியும் என்று மைய அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்கள்; நாங்கள் வற்புறுத்தி வருகிறோம்.

2004 ஜூலை 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.ஆர். சுந்தரம்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் மத்திய தொழில் துறை அமைச்சர் முரசொலி மாறன் அவர்கள், உலக வர்த்தக நிறுவனத்தின் மூலமாக ஒப்பந்தம் செய்து கொண்டதன் பயனாக, நமக்கு ஏதாவது நன்மை உண்டா? அதிலும் குறிப்பாக, அந்த ஒப்பந்தம் செய்து கொண்டதனால்—தற்போது starch-ஐப் பற்றிக் கூறினார்கள்; மேலும்—Tea-யினுடைய விலை, பால் பொருளினுடைய விலை, ஆக, அனைத்தின் விலைகளும் குறைந்து, இப்போது விவசாயிகள் எல்லாம் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதையெல்லாம் தடுத்து நிறுத்துவதற்கான வகையிலே, நம்முடைய தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறதா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் மைய தொழில் அமைச்சராக மறைந்த திரு. முரசொலி மாறன் இருந்தபோது உலக வர்த்தக நிறுவன ஒப்பந்தத்தால், குறிப்பாக அந்த Doha Rounds என்று சொல்லக்கூடிய அந்தப் பேச்சுவார்த்தையின் மூலமாக, இந்தியாவிற்குப் பெரிய வெற்றி, WTO-வில் ஏற்பட்டது என்ற ஒரு எண்ணம் உருவாகக்கூடிய நிலையினை அப்போது மைய அரசு உருவாக்கியது; அந்த அமைச்சர் அவர்களும் கூறியிருந்தார்கள். ஆனால், உண்மை நிலை அதுவல்ல; விவசாயத்தில் உலக வர்த்தக நிறுவன ஒப்பந்தத்தால் ஏற்படுகிற பாதிப்புகள் எல்லாம் நீக்கப்பட்டு விட்டன என்ற ஓர் அறிவிப்பைத் தந்தார்கள். அப்படி அது நீக்கப்படவில்லை. அதைப்போலவே, முதலீடு வெளிநாடுகளிலேயிருந்து, இந்தியாவிற்கு, விவசாயத் துறைக்கும் அதிகம் வரும் என்று சொன்னார்கள். அப்படி விவசாயத் துறைக்கு வெளிநாடுகளிலிருந்து அதிகமான முதலீடு வரவில்லை; மற்ற துறைகளுக்கு முதலீடு வந்ததேயொழிய-60 முதல் 70 சதவீதம் இந்தியப் பொருளாதாரம் விவசாயத்தை நம்பி இருக்கிறது—Agro—based industries-க்கு அவர்கள் கூறியதுபோல முதலீடு வரவில்லை. பாதிப்பு அதிகமாக உலக வர்த்தக ஒப்பந்தத்தால் ஏற்பட்டது. ஸ்டார்ச் மட்டுமல்ல, Tea இந்தியாவிலே, உலகத்திலேயே அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் உலக வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டோம் என்ற போர்வையிலே, வெளிநாடுகளிலிருந்து Tea

[2004 ஜூலை 31

வெகு அதிகமாக இறக்குமதி செய்யப்பட்டதால், Tea உற்பத்தியில் விலை வீழ்ச்சி பெரிதும் இந்தியாவில் ஏற்பட்டது. நீலகிரி மாவட்டத்தினுடைய சிறு விவசாயிகள் எல்லாம் பெரும் பாதிப்புக்கு இதனால் உள்ளானார்கள். இதற்கு மைய அரசு அப்போது எடுத்த நடவடிக்கையும், உலக வர்த்தக ஒப்பந்தமும்தான் காரணம். அது மட்டுமல்ல. பழங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. Juices இறக்குமதி செய்யப்படுகின்றன. Chocolate, sweets போன்றவையும் இறக்குமதி செய்யப்படுகின்றன. நமது நாட்டிலே நிறைய பால் உற்பத்தி ஆகிறது. பால் powder எல்லா மாநிலங்களிலும் உற்பத்தி ஆகிறது; Surplus production இருக்கிறது; அதிகப்படியாக உற்பத்தி ஆகிறது. ஆனாலும்கூட, வெளிநாடுகளிலிருந்து பால் powder இறக்குமதி செய்ய, இந்த உலக வர்த்தக ஒப்பந்தம் என்ற போர்வையிலே அனுமதியை மைய அரசு தந்துவிட்ட காரணத்தால், பால் உற்பத்தி இந்தியாவிலே பெரிய பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது. தமிழ்நாட்டில்கூட நாம் நிறைய பால் powder-ஐ விற்க முடியாத நிலை இன்று உருவாகி இருப்பதற்குக் காரணம், இந்த உலக வர்த்தக ஒப்பந்தத்தின்கீழ் அப்போது இதில் முக்கிய பொறுப்பு வகித்த, அமைச்சராக இருந்த மறைந்த மாறன் காலத்தில் பால் powder இறக்குமதிக்கும் அவர்கள் அப்போது அனுமதி தந்துவிட்டார்கள். இப்படிப்பட்ட காரணங்களால் பெரிய பாதிப்பு ஏற்பட்டது. இதற்கு அடுத்து CANCUN என்ற ஒரு பேச்சுவார்த்தை—சுற்றுப் பேச்சு வார்த்தை — உலக வர்த்தக ஒப்பந்தத்தினுடைய குறைகளைப் போக்க மேற்கொள்ளப்பட்டது. அதிலும் முன்னேற்றம் இல்லை. அதுவும் தள்ளிப் போடப்பட்டுவிட்டது. இந்த நிலையில் விவசாயப் பொருளாதாரம் இந்தியாவில் பெரிதும் பாதிப்புக்கு உலக வர்த்தக ஒப்பந்தத்தால் உள்ளாகி இருக்கிறது. Intellectual Property Rights என்று சொல்லக்கூடிய தனி மனிதனுடைய கண்டு பிடிப்புகளுக்குக்கூட உலக வர்த்தக ஒப்பந்தத்திலே பாதுகாப்பு இல்லை. இந்தியாவிலே, குறிப்பாக indigenous medicines, அதாவது நமது மூலிகைகள் மூலமாகக் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்ற பல அற்புத மருந்துகளுக்குக்கூடப் பாதுகாப்பு இல்லாத காரணத்தால் உலக வர்த்தக ஒப்பந்தத்தில், அவர்களுக்குச் சாதகமாக இருக்கின்ற காரணத்தால், வெளிநாட்டிலே இருக்கிறவர்கள் நமது கண்டுபிடிப்புகளைத் திருடிக் கொண்டுபோய் அவர்கள் patent செய்துவிடுகிறார்கள். அதனால், இந்தியக் கண்டுபிடிப்புகளுக்கு, பன்னெடுங்காலமாக நடைமுறையில் இருக்கிற கண்டுபிடிப்புகளுக்குக்கூட பாதிப்பு ஏற்படுகிறது. அமெரிக்கா போன்ற நாடுகள் உலக வர்த்தக ஒப்பந்தத்தை வலியுறுத்துகிற அதே

2004 ஜூலை 31]

நேரத்தில், 40 ஆயிரம் கோடி, 50 ஆயிரம் கோடி என்று விவசாயிகளுக்கு subsidy வழங்குகிறார்கள். ஆனால் அதே உலக வர்த்தக ஒப்பந்தத்தைச் சொல்லிக் காட்டி, இந்தியாவிலே விவசாயிகளுக்கு subsidy கொடுப்பது கூடாது என்று அவர்கள் சொல்கிறார்கள் என்று மைய அரசு மாநில அரசை வற்புறுத்தி, விவசாயிகளுக்குத் தொல்லையைத் தருகிறது. இவற்றையெல்லாம் மாற்ற வேண்டும் என்றும், Import duty அதிகம் போடப்பட வேண்டும் என்றும், அதன் மூலமாக விவசாய விளைபொருட்கள், சிறு தொழில்கள்—SSI Units--இவையெல்லாம் பாதிப்பிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மைய அரசை வற்புறுத்தி வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 104, திரு. ஏ.எஸ். கண்ணன், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

104—

வேலைவாய்ப்பு

***38746–திரு. ஏ.எஸ். கண்ணன்:**

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதியில், வட சென்னை அனல் மின் திட்டத்திற்கும், எண்ணூர் துறைமுகத்திற்கும் நிலம் அளித்த பெரும்பாலான மக்களுக்கு அரசு வேலைவாய்ப்பு அளிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதியில். வட சென்னை அனல் மின் நிலையக் கட்டுமானத் திட்டத்திற்கு நிலம் கையகப்படுத்தும்போது நிலத்தில் குடியிருந்து வெளியேற்றப்பட்ட குடும்பங்களுக்கு வீட்டுக்கு ஒருவர் வீதம் பணி வழங்கப்பட்டுவிட்டது.